கூகை ஆந்தை [Barn owl]

தமிழகம் எங்கும் பரவலாக காணப்படக்கூடியது. ஆனால் பத்திரிகைகளில் அதிசய பறவை என்று குறிப்பிடுவது கூகை ஆந்தையைத்தான்.

பழைய கோட்டைகள், பாழடைந்த வீடுகள், புழக்கத்தில் இல்லாத கிணறு, உபயோகமில்லாத ஓய்வுகூடில் ஆகிய பகுதிகளில் இப்பறவையை காணலாம். உருண்டைவடிவில் உள்ள கழிவுகளை வைத்து கூகை ஆந்தையின் இருப்பிடம் அறியலாம்.

RS.70.00

காக்கைக் கூடு

www.crownest.in

பூஇரத்தினசபாபதி

ஆந்தைகள்
ஓர் அறிமுகம்

ஆந்தைகள்
ஓர் அறிமுகம்

பூ.இரத்தின சபாபதி M.Sc, M.Phil

எண். 16, மாரி செட்டி தெரு
மந்தைவெளி,
சென்னை - 600 028

காக்கைக் கூடு வெளியீடு : 19

நூல் : **ஆந்தைகள் ஓர் அறிமுகம்**

ஆசிரியர் : **பூ. இரத்தினசபாபதி** M.Sc, M.Phil

உரிமை : ஆசிரியருக்கு

முதல் பதிப்பு : நவம்பர், 2022

வெளியீடு : **காக்கைக் கூடு**
எண். 16, மாரி செட்டி தெரு
மந்தைவெளி,
சென்னை-28

விலை : **ரூ.** /-

மின்னஞ்சல் : crownest2017@gmail.com

மொபைல் : 9043605144

Website : www.crownest.in

(சூழலியல் நூல்கள் அனைத்தும் ஒரே இடத்தில்)

புத்தகத்திற்காக செலவு செய்யும் தொகை செலவு அல்ல.

அது அறிவுக்கான முதலீடு. புத்தகங்களை வாங்குங்கள். படியுங்கள். நண்பர்களுக்கு பரிசளியுங்கள்.

இந்த புத்தகம் அமேசான், விக்கிமீடியா மற்றும் மின் நூலகத்திலும் கிடைக்கும். NATURE FOR FUTURE என்ற PODCAST ல் உலகம் முழுவதும் உள்ள நேயர்கள் ஆடியோ புத்தகமாகவும் கேட்கலாம்.

சமர்ப்பணம்...

தென்னிந்தியாவின் ஆந்தை மனிதர்
என்று அழைக்கப்பட்ட
நினைவில் வாழும்
எரிக் இராமானுஜம் அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

நினைவலைகளில் இருந்து...

எங்கள் அன்புக்குரிய நண்பர் நினைவில் வாழும் திரு எரிக் இராமனுஜம் அவர்களுடன் இனைந்து பணியாற்றிய அனுபவங்கள் இன்றும் நினைவலையில் காற்றாடுகிறது. அந்த சுகமான நினைவுகள் இன்றும் இனிமை நிறைந்த பசுமையாக இருக்கின்றது.

அந்த நினைவின் பகுதியாக இந்த புத்தகத்தை அவருக்கு சமர்ப்பணம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆந்தை என்றாலே நாம் ஆச்சரியமாக பார்க்கும் ஒரு பறவை தான். இந்திய கழுகு ஆந்தையும், ஒரு வகை ஆந்தை தான். அந்த ஆந்தையுடன், தொடர்புடைய இரவு நேர வேட்டையாடும் ஆந்தைகள் மற்றும் அவை உண்ணும் இரையைப் பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து செய்து வந்தார், திரு இராமனுஜம் அவர்கள்.

2002 ஆம் ஆண்டு விளம்பரத் துறையில் தனக்கு கிடைத்த வேலையை ராஜினாமா செய்து விட்டு, பிச்சாண்டிகுளம் காடுகள்

ஆலோசனை மையத்தில் பணியாற்றினார். அங்கே தான் அவருடன் இனைந்து பணியாற்றிய அனுபவமும் எங்கள் நட்பும் வளர்ந்தது.

இவர் ஆற்றிய பணிகளுள், பிச்சாண்டிகுளம் காடுகள் மூலமாக பாண்டிச்சேரிக்கு அருகில் உள்ள கலிவெளி ஈரநில வளாகம், மற்றும் சென்னையில் உள்ள அடையார் சதுப்பு நில வளாகம் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலையில் உள்ள ஷெவ்ராய் மலை, சிறுமலைத் தோட்டம் ஆகியவற்றில் பல்லுயிர் ஆராய்ச்சி ஆய்வுகள், வனவிலங்கு கலை மற்றும் அது சார்ந்த சிற்பவேலைகளில் ஈடுபட்டுவந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது. இவருடைய படைப்புகளான ஆசிய ஆந்தைகள் பற்றிய படங்களுடன் கூடிய புத்தகமும் அடுத்தவருடத்திற்குள் வெளிவர உள்ளது என்பதை இந்த தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆந்தைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் உலகு எங்கும் ஆகஸ்ட் 4ம் தேதி ஆந்தைகள் விழிப்புணர்வு தினமாக [இந்தியாவிலும்] கொண்டாடப்படுகிறது.

அணிந்துரை

கோவி. இராமசாமி,
M.A (Eng), M.Sc., M.Phil., Phd.,
முன்னாள் முதல்வர்
ஏ.வி.சி கல்லூரி, மயிலாடுதுறை
ஏ.ஆர்.சி கல்லூரி, மயிலாடுதுறை
பேராசிரியர், தனபாலன் அறிவியல்
கலைக்கல்லூரி, சென்னை.

'ஆந்தைகள் ஓர்அறிமுகம்' ஆந்தைகளைப் பற்றி எனது முன்னாள் மாணவர், சூழலியல் நிபுணர் பூ. இரத்தினசபாபதி அவர்களின் அறிவியல் நூலுக்கு அணிந்துரை அளிப்பதில் அகமகிழ்வு எய்துகிறேன். நூலாசிரியர் தனது உரையில் எழுதியிருப்பது போல்1985ல் இருந்து 1995 வரை ஏ.வி.சி கல்லூரி, விலங்கியல், வன உயிரியல் துறையில் எம் துறைத் தலைவர் முனைவர் ஆர். கனகசபையின் தலைமையில் ஆந்தை ஆய்வுமையம் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பல அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்தி ஐவர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர்.

ஆந்தை அலறுதலை மட்டுமே கேட்டு இருந்த நாங்கள் கூகை ஆந்தையை அருகில் பார்த்து அவை குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதை கண்டு வியந்துள்ளோம். கூகை ஆந்தை கூடாரம் அமைத்து கல்லூரி வளாகத்தில் நேரடி ஆய்வு செயததும், கோயில் கோபுரங்களில், இருண்ட அதிக புழக்கம் இல்லாத பிரகாரம், உபயோகமில்லா கட்டிடங்களில் தேடிய அந்நாட்கள் மிகப் பசுமையாக நெஞ்சில் நிழலாடுகிறது.

எங்களது வன உயிரியல் ஆய்வு மாணவர்களின் அரிய உழைப்பை, சீரிய முயற்சிகளை தமிழக வேளாண்துறை நடத்தும்

கூட்டங்களில் கிராமம் தோறும் சென்று கூகை ஆந்தை விவசாயின் உற்றதோழன் என்று பிரச்சாரம் செய்தது, ஒளி நாடாமூலம் விளக்கமளித்தது மிகப்பெரிய சாதனையாகும்.

இந்நூல் பாரதியின் கனவாகிய 'மேலை நாட்டுச் சாத்திரங்கள் தமிழில் இல்லை கொணர்ந்து இங்கு சேர்ப்பீர்' என்ற அறைகூவலுக்கு செயல் விளக்கமாகப் படைக்கப்பட்டுள்ளது. ஆந்தைகளின் வகைகள், உணவு பழக்க வழக்கங்கள், தமிழிலக்கிய வரிகளோடு எளியநடையில் உரிய ஒளிப்படங்களோடு அற்புதமாக தந்துள்ளது மிகப் பாராட்டிற்குரியது. ஆந்தைகள் எலிகளைக் கட்டுப்படுத்தும் இயற்கை காரணிகள் என்பதை விளக்கியதுடன், இவற்றை பாதுகாக்கும் முறைகளை விவரித்துள்ளது நல்ல முயற்சி.

இந்நூலைப் போல பல உயிரினங்களைப் பற்றிய அறிவியல் நூல்கள் செம்மொழியாம் தமிழுக்கு அணி சேர்பவை. இந்நூலாசிரியரின் நல்ல பணி தொடர வேண்டும். இந்த நல்ல நூலைப் படித்து ஆந்தைகளைப் பற்றிய அறிவியல் தெளிவு பெற்று, வேளாண் பெருமக்களுக்கு எடுத்துரைத்து எலிகளை கட்டுப்படுத்தி அனைவரும் பயண் அடைய வாழ்த்துகிறேன்.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோம், பிற உயிர்களையும் வாழவைப்போம்.

அறிக அறிவியல், பெறுக தெளிவு

வாழ்த்துகளுடன்

மயிலாடுதுறை **கோவி. இராமசாமி**
29, நவம்பர்,2022
gramaswamy52@gmail.com

என்னுரை

ஆந்தை என்றால் நாம் அனைவருக்கும் ஞாபகத்தில் வருவது அதன் கம்பீரமான கண்தான். உவமைக்கு கூட ஆந்தை போல் பார்கிறான் என்று கூறுவார்கள். அந்த ஆந்தையைப் பற்றி நான் அறிந்த தகவலை உங்களுக்காக நூலாக படைத்து வெளியிட நீண்டநாள் ஆவலின் முயற்சியில் இந்நூல் உங்கள் கரங்களில் தவழ்கிறது.

1987ல் முதுகலைப் பட்டப்படிப்பில் வனவிலங்கு பற்றிய ஆறுமாத ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு முன்பு, எனது மூத்த நண்பர் முனைவர். ரா.சந்தானகிருஷ்ணன் அவர்களின் வித்தியாசமான ஆந்தை (கூகை ஆந்தை, Barn owl) ஆராய்ச்சி என்னை மிகவும் ஈர்த்தது.

அவர்களுடன் இணைந்து ஆந்தையை தேடும் பணியில் ஒவ்வொரு கோவிலாக பயணம் செய்தோம். அதை இன்றும் மறக்க முடியாத அனுபவமாக இருக்கிறது.. இப்பொழுது பல்லுயிர் பாதுகாப்பு ஆர்வம் அரசின் முயற்சியாலும், அந்தந்த பகுதியில் உள்ள ஒவ்வொரு சூழலியலாரின் தனி முயற்சியாலும் அனைவரிடமும் விழிப்புணர்வு ஏற்பட்டு வளர்ந்து வருவதை காண முடிகிறது.

ஆனால் ஆந்தைப் பற்றிய தமிழ் கட்டுரைகள் மிகவும் குறைவு அல்லது இல்லை என்றே சொல்லலாம்.. ஒரு ஒப்பீடாக பார்த்தால், ஆந்தையை பற்றிய ஆங்கில ஆய்வுக்கட்டுரைகள் அதிகம் குறிப்பாக முனைவர் சந்தானகிருஷ்ணன், பேராசிரியர் முனைவர் ரா. கனகசபை, முனைவர் நாகராஜன், முனைவர் நீலநாராயணன், என மன்னம்பந்தல் மயிலாடுதுரையில் உள்ள ஏவிசி கல்லூரி ஆந்தைகளின் ஆராய்ச்சியில் முன்னோடியாக திகழ்ந்தது என்றால் மிகையில்லை.

எனது நீண்ட நாள் நண்பரும் ஆந்தைப் பற்றிய ஆராய்ச்சியில் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவருமான 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 தேதி, நம்மை விட்டு பிரிந்த திரு.எரிக் இராமானுஜம், அவர்களின் நினைவாக இந்நூல் உங்களுக்கு படைக்கப்படுகிற்து. திரு எரிக் ராமானுஜம் அவர்களின், ஆந்தை ஆராய்ச்சி, தத்துரூபமான வனவிலங்கு ஓவியங்கள் அவற்றில் அவருக்கு

மிகவும் பிடித்தமான ஆந்தையை இந்நூல் மூலம் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சி எங்கள் நட்பை பறைசாற்றும். அவர் இன்றும் நம்முடன் ஓவியங்கள் மூலம் வாழ்ந்து கொண்டு இருப்பதாக கருதி அவரின் சில ஓவியங்களை இந்நூலில். இணைத்துள்ளேன்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் பறவை க. ரத்தினம் அவர்கள் தமிழில் எழுத ஊக்கப்படுத்துவதும், அன்பிற்கினிய திரு விசு அய்யர் அவர்களின் விடாமுயற்சியும், அவர் தம் சங்க இலக்கியங்களைப் பற்றிய விளக்க உரை, பக்தி இலக்கியத்தில் ஆந்தைகள், நூல் வடிவமைப்பு என அனைத்திலும் உதவியதன் முயற்சியில் முகிழ்தது தான் இந்நூல். அவர்களுக்கு இந்த தருணத்தில் நன்றிகளை பதிவு செய்ய கடமை பட்டுள்ளேன்.

இத்துடன், திரு சரவணன் அவர்களின் கைவண்ணத்தில் மலர்ந்த ஆந்தை. படங்கள், நினைவில் வாழும் திரு எரிக் இராமானுஜம், அவர்களின் ஆந்தை ஓவியங்கள், மற்றும் கூகை ஆந்தை, புள்ளி ஆந்தை போன்ற படங்களை தந்து மகிழ்ந்த திரு. ராஜன் அவர்களின் நட்புக்கும் நன்றிகளை பதிவு செய்கிறேன். சிறிய காட்டு ஆந்தையின் படம் அளித்து உதவிய திரு. சந்தானம் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இணையத்தில் இனிய நட்பு கொண்ட திரு லன்டன் சாமிநாதன் அவர்களின் தமிழ் வேதா பிளாக் ஆந்தைகள் பற்றிய குறிப்பு தந்தது இந்நூல் அமைப்பில் மிகவும் உதவியாக இருந்தது.அவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை பதிவு செய்கிறேன். திரு. தீனா லூயிஷ் ஆந்தைப் பற்றிய வலைத்தளம், அவர்களுக்கும் எனது நன்றியை பதிவு செய்கிறேன்

இந்த நூலின் படைப்பில் இந்திய வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் குற்றங்களை கட்டுப்படுத்தும் பிரிவு அலுவலர் திரு மாரன்கோ, அவர்களின் ஆந்தைகள் பற்றிய சட்டவிரோத வணிகம் தெடர்பாண கருத்துக்களும் மிகவும் பயணுள்ளதாக இருந்தது. அவர்களுக்கும் நன்றியை பதிவு செய்கிறேன்.

இந்நூலுக்கு கருத்துகளை வழங்கிய முனைவர் முருகவேல் அவர்கள் நினைவில் வாழும் திரு எரிக் இராமனுஜம் அவர்களின் நண்பர் என்பது இந்த நூலுக்கு பெருமை சேர்ப்பனவாக இருக்கும் என நம்புகிறேன். முனைவர் சிவசுப்பிரமணியன் அவர்களின் கருத்துக்கும் நன்றியினை பதிவு செய்கிறேன்.

எரிக்கின் ஓவியங்களை பயன்படுத்தி கொள்ள அனுமதி தந்த மும்பை இயற்கை வரலாற்றுச் சங்கத்திற்கு நன்றிகளை பதிவு செய்கிறேன். பிச்சாண்டிகுளம் காடுகள் அலுவலர்கள் அனைவருக்கும் இத்தருனத்தில் நன்றியை பதிவு செய்கிறேன். இந்நூல் பற்றிய மேலான கருத்துக்களை வழங்கி ஊக்கம் அளித்து அணிந்துரை வழங்கிய முனைவர் பேராசிரியர் கோவி. இராமசாமி அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வடிவமைப்பிலும் கணனி அச்சு திருத்தங்கள் செய்வதில் துணையாக இருந்த எங்கள் காக்கைகூடு பதிப்பகத்தாருக்கு அன்பும் நன்றியும் உரித்தாக்குகிறேன்.

இந்த நூலினை அன்போடு வாங்கி, ஆந்தைகளின் அதிசய உலகத்தை அறிந்து கொண்டு பல்லுயிர் பாதுகாப்புக்கு ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும், இந்த உலகம் நாம் வாழ்வதற்கு மட்டுமல்ல என்பதை புரிந்து கொண்டால், இந்த உணர்வு தானே வந்து விடும் என சொல்லி உங்களை நூலிற்குள்ளே அழைத்து செல்கிறேன்.அன்புடன்,

பூ. இரத்தினசபாபதி
brspathy@gmail.com

பறவைகள் பலவிதம்

பகல் வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது (குறள் 481)

பகல் நேரத்தில் ஆந்தையைக் காகம் வென்றுவிடுமாம். இரவில் காகத்தை ஆந்தை வென்றுவிடுமாம், இது வள்ளுவன் நமக்கு ஆக்கி தந்த சிந்தனை.

ஆகையால், வெற்றி வேண்டுவோர் காலத்தை கருதி செயல்பட வேண்டும். என்ற வள்ளுவரின் வரிகளை மனதில் எண்ணி, வள்ளுவர் போற்றிய ஆந்தை என்பதில் இருந்து எழுத தொடங்குகிறேன்.

பறவைகள் பலவிதம்

பறவைகள் என்றதும், பறவைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒரு விதம். என்ற கவியரசர் கண்ணதாசன் வரிகள் தான் ஞாபகம் வருகிறது.

ஆந்தை என்றால் அனைவரிடமும் மாறுபட்ட கருத்துக்கள் நிறைந்துள்ள இந்த தருனத்தில் அறிவியல் சிந்தனைகளுடன் வெளியிடுவதன் மூலம், ஆந்தை பற்றிய நேர்மறை சிந்தனை மலரும் என்று நம்பிக்கை கொள்வோம். ஏன் என்றால் இவையும் பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினம் தானே.

மனிதர்களை தொந்தரவு செய்யாமல் இரவில் வெளி வந்து, நம்மால் கட்டுப்படுத்த முடியாத எலிகளை இரையாக உட்கொண்டு, உணவுச்சங்கிலியில் முக்கியப் பங்கை வகிக்கிறது ஆந்தை என்றால் அதற்கு ஒரு சபாஷ் போடாமால் இருக்க முடியுமா என்ன?!

பொதுவாக பகலில் உலாவும் பறவைகள் பகலாடி (Diurnal) என்றும், இரவில் உலாவும் பறவைகள் இரவாடி (Nocturnal) என்றும் அழைப்பார்கள். ஆந்தைகளில் பூமன் ஆந்தை (Brown Fish Owl) மற்றும் அந்தி நேர கழுகுஆந்தை (Dusky eagle owl) தவிர மற்ற அனைத்தும் இரவில் வேட்டையாடும் பழக்க முடையவை. இந்த இரண்டு ஆந்தைகளும், இந்திய துணைக் கண்டம் முழுவதும் பரவலாக காணப்படக் கூடியவையாகும்.

இயற்கையாகவும், பொதுவாகவும் மனிதர்கள் அனைவரும் பகலில் தூங்கி இரவில் விழிப்பதில்லை. ஆனால் தற்பொழுது பன்னாட்டு நிறுவனங்களின் வேலை தொடர்பாக பகலில் தூங்கி இரவில் விழித்திருக்கும் கட்டாயம் சிலருக்கு இருக்கிறது. இயற்கையாக நம் உடம்பு இரவில் தூங்கவே விரும்பும். ஆனால்

பறவை உலகில் மட்டும் பகலில் மற்றும் இரவில் ஊர் சுற்றும் பறவை வகைகள் உண்டு. இயற்கையின் படைப்பில் இதுவும் ஒரு ஆச்சரியம் தான். இரவு பறவையான ஆந்தையைப் பற்றி ஆராய்ந்தால் இந்த உண்மை நமக்கு தெரிய வரும்.



சிறிய காட்டு ஆந்தை

பொதுவாக பகலில் பறவை நோக்க (Bird watching) செல்வது போல், இரவிலும் பறவை நோக்க தொடங்க வேண்டும். இதற்கு எல்லாம் பெரியதாக முயற்சிக்கத் தேவையில்லை, சாதரனமாக வெளியே செல்வது போல் இரவில் சிறிது தூரம் நடந்து பாருங்கள் அப்பொழுது உன்னிப்பாக கவனித்தால் போதும் இரவு பறவைகளான ஆந்தையைப் பார்க்கலாம். ஆரம்பத்தில் பகலில் நன்கு பார்த்த பிறகு இரவில் ஆரம்பியுங்கள். நிறைய ஆச்சிரியங்களை உள்ளடக்கியதே ஆந்தைகளின் உலகம் என்று போகப் போக உணரத் தொடங்குவீர்கள்.

இதுவரை இந்தியாவில் நாற்பத்தி மூன்று(43) பறவை இனங்களை இரவு பறவைகளாக பதிவு செய்து உள்ளார்கள். அதில் முப்பத்தி இரண்டு(32) பறவை வகைகள் ஆந்தைகளாகும். இரவு பறவைகளும் பகலாடியை போல் சூழல் சமன்பாட்டையே சரி செய்கிறது. பூச்சிகள், எலிகள் ஓணான், தவளை போன்ற வற்றை உண்டு அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப் பாட்டுக்குள் வைக்கிறது.

இந்தியாவிலேயே அதிக பறவை இனங்களை கொண்ட முதல் 10 மாநிலங்களில், தமிழ்நாடு 500க்கும் மேற்பட்ட பறவை இனங்களுடன் 2ஆம் இடத்தை வகிக்கிறது. உலக அளவில்

ஆந்தைகளில் 200க்கும் மேலான வகைகள் உள்ளன. இவைகளில் 32 வகை இந்தியாவில் காணப் படுகிறது. அண்டார்க்டிகா தவிர மற்ற எல்லா நிலப் பரப்புகளிலும் ஆந்தைகள் உள்ளன. ஆந்தையின் காதுகள் இரண்டும் அளவில் மாறுபட்டு இருக்கும். கேட்கும் திறன் மிகவும் அதிகம். இது தனது தலையை இரு திசைகளிலும் 270 டிகிரி வரை திருப்ப வல்லது.



அந்தி நேர கழுகு ஆந்தை

பொதுவாக ஆந்தைகள் முழு இருட்டிலும் கூட ஒலியை உணர்ந்து வேட்டையாடக் கூடிய தன்மையுடையது. மற்ற பிராணிகளிடமிருந்து வரும் ஒலியைக் குவித்துக் காதுக்கு அனுப்ப உதவுகின்றன. ஆந்தையின் முக அமைப்பு அவ்வாறு அமைந்துள்ளது. இதனை facial disk என ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஆந்தையில் ஆண் பெட்டை என சிறகுகளின் நிறத்தை வைத்து வேறுபடுத்த முடியாது. ஆனால் பெட்டை ஆந்தை உருவத்தில் சற்று பெரியதாக இருக்கும். அதேபோல் ஆந்தையின் ஒலியை (சத்தம்) அலறல் என்று அழைப்பார்கள்.

பூமன் ஆந்தை

Dusky eagle owl- அந்திநேர கழுகு ஆந்தை, Brown fish owl பூமன் ஆந்தை இரண்டும் பகல் நேரங்களில் வேட்டையாடும் பழக்கமுடையவை. “பூம் பூம்” எனவும் “பூமோ பூம்” எனவும் அச்சம் ஊட்டும் வகையில் உரக்கக் குரலெடுத்துக் கத்துவதாலேயே தமிழில் பூமன் ஆந்தை என அழைக்கப்படுகிறது. இது மேகமூட்டம் உள்ள நாட்களில் பகலிலும் வேட்டையாடும். மற்ற நாட்களில் மாலை நேரத்தில் நீர்ப்பரப்பின் மீது பறந்தபடி நீரின் மேற்பரப்பிலிருந்தே மீன்களைக் கால்களால் பற்றிப் பிடிக்கும். சிறு பறவைகளையும் வேட்டையாடித் தின்னும் இயல்புடையது.

இரவாடிப் பறவைகள்

1. ஆந்தை (Owl)
2. கூகை (Barn Owl)
3. தவளை வாயன் (Srilankan Frogmouth)
4. இந்தியன் பக்கி ((Indian Night Jar)
5. இராகொக்கு (Night Heron)
6. கலுவிக் கோடி (Jerdon's Courser)

மொத்தமே ஆறுவகையான இரவாடிகள் தான். ஆனால் மிக சுலபமாக இதில் சில பறவைகளை பார்த்துவிட முடியாது. தொடர் முயற்சி மற்றும் அதிக ஆர்வம் இருக்கவேண்டும். அதற்கும் மேல் இவைகளைப் படம் பிடிப்பது என்பது எவ்வளவு

சிறிய ஆந்தை

பழுப்பு காட்டு ஆந்தை

கடிணம் என்று எண்ணிப் பாருங்கள். இந்நூலில் இடம் பெற்றுள்ள திரு.சரவணன் அவர்களின் கலர் ஒலிப்பட கைவண்ணத்தையும் திரு ராஜன் அவர்களின் இந்திய கழுகு ஆந்தை படமும் இதன் சிறப்பை சொல்லும்.

பொதுவாக இந்தியாவில் காணப்படக்கூடியவை ஆந்தை களின் சில வகைகள்

1. புள்ளி சிறு ஆந்தை Spotted Owl (Athene brama)
2. குட்டை காது ஆந்தை Short Eared Owl (Asio flammeus)
3. பெரிய புள்ளி ஆந்தை –Mottled wood Owl (Strix ocellata)
4. வேட்டைகார ஆந்தை Brown Hawk Owl Ninox scutulata
5. சிறிய காட்டு ஆந்தை Jungle Owlet (Gllaucidium radiatum)
6. பூமன் ஆந்தை Brown Fish Owl (Ketupa zeylonensis)
7. பெரிய காட்டு ஆந்தை Forest Eagle Owl (Bubo nipalensis)
8. இந்திய சிறு ஆந்தை Indian Scops Owl Ottus bakkamoena
9. பழுப்பு காட்டு ஆந்தை Brown wood Owl (Strix leptogrammica)

இந்திய சிறு ஆந்தை

குட்டை காது ஆந்தை

10. சிறிய ஆந்தை Oriental Scops Owl (Ottus sunia)

11. கூகை ஆந்தை Barn owl (Tyto alba)

12. இந்தியக் கழுகு ஆந்தை Indian eagle-owl, Horned owl (Bubo benghalensis)

13. பட்டைக் கழுத்து சின்ன ஆந்தை Collared owlet (Glaucidium brodiei)



பட்டைக் கழுத்து ஆந்தை

ஆந்தையைப் பற்றிய முக்கிய அம்சங்கள்

- பொதுவாக ஆந்தைகள் பறக்கும் சத்தம் நமக்குக் கேட்காது. அவை வேட்டையாடும்போது மட்டும் ஒரு பயங்கரமான அலறலை வெளியிடுகின்றன. ஆந்தைகளின் லேசான உடல், பெரிய இறக்கைகள் மற்றும் மென்மையான இறகுகள் மிகவும் அமைதியாக பறக்க உதவி செய்கிறது. மற்ற பறவைகளைப் போல் பறக்கும் போது சத்தம் வராததற்கு இதுதான் காரணம். அதனால் இரை உயிரிகளை ஆந்தை நெருங்கும் வரை இரையால் உணரமுடியாது.

- ஆந்தையின் இதய வடிவிலான முக அமைப்பு ஒலியை சேகரிக்கிறது. இது ஆந்தைகளின் அசாதாரண உணர்திறன் செவித்திறனுக்கு செல்ல உதவுகிறது. இது முழு இருளிலும் சிறிய இரையை கண்டுபிடிக்க உதவுகிறது.
- இரவில் இரை தேட ஆந்தைகள் தங்களது சக்தி வாய்ந்த கேட்கும் திறனையும் கண் பார்வையையும் நம்புகின்றன.
- ஆந்தைகளின் இறகுகள் மென்மையாக இருப்பதால் மழையின் போது வேட்டையாட செல்லாது.
- ஆந்தைகளின் குழு பாராளுமன்றம் என்று அழைக்கப் படுகிறது. இதற்கு உதாரணமாக புள்ளி ஆந்தையைத் கூறலாம். சிறு குழுவாக இருக்கும். பெரும்பாலான ஆந்தை இனங்கள் தனியாகத் தான் இருக்கும்.
- ஆந்தைகளின் வலுவான கூரிய நகங்கள் இரையைப் பிடிக்கவும் கொல்லவும் உதவியாக உள்ளன.
- ஆந்தைக்கு மூன்று இமைகள் உள்ளன. ஒன்றை மூடித் திறக்கவும், மற்றொன்றைத் தூங்குவதற்கும், இன்னொன்றைக் கண்ணை ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் வைத்திருக்கப் பயன்படுத்திக் கொள்ளும்.
- நிறைய ஆந்தைகளுக்குத் தலையில் காது மடல்கள் கொம்பு கள் போல அமைந்திருக்கும். ஆனால், அவை காதுகள் அல்ல. கொம்பு என்று அழைக்கப்பட்டாலும் அது சிறகு தான். உதாரணம் கொம்பன் ஆந்தையை குறிப்பிடலாம்.

மற்ற பறவைகளுக்கு இல்லாத சிறப்பு அம்சம் ஒன்று ஆந்தைக்கு உண்டு. பொதுவாக பறவைகளுக்கு பக்கவாட்டில் கண்கள் இருக்கும். ஆந்தைக்கு மட்டும் தான் மனிதர்களை போல இணையாக முன் பக்கம் கண்கள் இருக்கும். கண் பற்றிய குறிப்பு என்பதால்...

ஆந்தைகளின் புகலிடம்

சென்னையில் அடையாறு கழிமுகப்பகுதி, தியாசபிகல் சங்கம் (அடையாறு ஆலமரம் உள்ள இடம்) மற்றும் அடையாறு

பூங்கா பகுதிகளில் ஆறு வகையான ஆந்தை வகைகள் இருப்பதாக ஆய்வுக்கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன 1. புள்ளி சிறு ஆந்தை, 2. கூகை ஆந்தை, 3. வேட்டைகார ஆந்தை, 4. குட்டை காது ஆந்தை, 5. சிறிய ஆந்தை மற்றும் 6. இந்திய சிறு ஆந்தை ஆகும்.

கடந்த பத்து ஆண்டுகளாக அடையாறு கழிமுகப்பகுதியில் பணியாற்றிய பொழுது மேல் குறிப்பிட்ட 6 வகைகளில் 4 வகை ஆந்தைகளைப் பார்க்க முடிந்தது. அவையாவன புள்ளி சிறு ஆந்தை, கூகை ஆந்தை, இந்திய சிறு ஆந்தை மற்றும் வேட்டைகார ஆந்தை ஆகும்.

பரவலாக காணப்படும் புள்ளி ஆந்தை (Spotted owlet)

பகலில் முழுவதமாக ஆந்தை தூங்கும் என்று பார்த்தால், அப்படி இல்லை. அடையாறு பூங்காவில் சுற்றுச்சூழல் மையம் அருகில் உள்ள 50 வருடங்களுக்கும் மேலான தூங்கவாகை மரம் ஒன்று உள்ளது. வயது முதிர்ந்தமரம் என்பதால் மரத்தில் பொந்துகள் உள்ளன. அப்பொந்தில் இரண்டு புள்ளி ஆந்தைளை (Spotted owlet) அடிக்கடி பார்த்த அனுபவமும் இந்த நூல் எழுத உறுதுணையாக இருந்தது. அதனை பகலில் தத்துரூபமாக படம்பிடித்த திரு.ராஜன் அவர்களை பாராட்டாமல் இருக்க முடியாது. மனித நடமாட்டம் அதிகம் உள்ள தருனத்தில் இரண்டு புள்ளி ஆந்தைகளில் ஒன்று வெளியில் செல்லும், மற்றொன்று தலையை ஆட்டிய படி மனிதர்களை பார்ப்பதும் தலை ஆட்டுவதை சில நொடிகள் நிறுத்துவதும் என்று இருக்கும்.

பார்ப்பதற்க்கு தலைஆட்டி பொம்மை போல் அழகாக இருந்தது. ஆபத்து ஏதாவது உள்ளதா என்று அவ்வப்போது உறுதிபடுத்திக்கொள்கிறது. சில சமயம் சிர்ர்ர்சிர்ர்ர் என்ற ஒலியை எழுப்பியபடி பொந்தில் இருந்து பறந்து செல்லும். தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக, வருடத்தில் இருமுறை புள்ளி ஆந்தை முட்டையிட்டு குஞ்சு பொறித்ததை பதிவு செய்தது குறிப்பிட்ட நிகழ்வாகும்.

அடையாறு பூங்காவில் பணியாற்றிய தருணங்களில், குறிப்பாக ஆந்தைகளை தொந்தரவு செய்யாமல், வரும் பார்வையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் புள்ளி ஆந்தையின் முக்கியத்துவத்தை அதன் இருப்பிடம் பற்றியும் உணர்த்தியுள்ளோன்.

இப்படிப்பட்ட ஏதுவான இடம் கிடைத்தால் ஆந்தைகள் வாழ்விடத்தை மாற்றாது. மாறாக மனிதர்களால் ஆபத்து என உணர்ந்தால் தங்கும் இடத்தை வேறு இடத்திற்கு மாற்றிவிடும். புள்ளிஆந்தையின் உருவஅமைப்பு மற்றும் வண்ணம் காய்ந்த மரக்கிளையின் அமைப்புடன் ஒத்துபோவதால் காதலியை பார்க்க காத்திருப்பது போல அதைப் பார்ப்பதற்கு சிறிது நேரம், சில சமயம் நெடிய நேரம் வரை காத்திருக்க வேண்டும்.

புள்ளி ஆந்தையின் விலங்கியல் பெயரான “*brama*” என்பது இந்துக்களின் முப்பெரும் தெய்வங்களில் ஒருவரான பிரம்மாவை குறிக்கும். மேலும் இதிகாசங்கள் மற்றும் இந்துப் புராணங்கள்படி இவை விஷ்ணுவின் மனைவியான பல செல்வங்களை அருளும் லட்சுமி தேவியின் வாகனமாகக் கருதப்படுகின்றது.

கூகை ஆந்தை (Barn owl)

தமிழகம் எங்கும் பரவலாக காணப்படக்கூடியது. குறிப்பாக பழைய கோட்டைகள், பாழடைந்த வீடுகள், புழக்கத்தில் இல்லாத கிணறு, உபயோகமில்லாத ஓய்வு குடில் ஆகிய பகுதிகளில் இப் பறவையை காணலாம். உருண்டை வடிவில் உள்ள உமிழ்களை வைத்து (Pellets) கூகை ஆந்தையின் இருப்பிடம் அறியலாம். வருடம் இரு முறை முட்டையிட்டு குஞ்சு பொறிக்கும். கூகையின் இரையான

எலிகள் கிடைப்பதைப் பொருத்துதான் இந்த பறவையின் இனப்பெருக்கம் நடைபெரும். பெரும்பாலும் கோவில் மேல் மாடப்பகுதிகளில் தான் கூகை ஆந்தையைக் காணலாம். ஏன் என்றால் அங்கு மனித நடமாட்டம் முற்றிலும் இருபத்து இல்லை.

ஆந்தையை பார்க்க

விலங்கியல் பூங்காக்களில் ஆந்தையின் பழக்கவழக்கங்கள் முற்றிலும் மாறுபட்டிருப்பதை நாம் அங்கு சென்று பார்க்கும்பொழுது உணரமுடியும். விலங்கியல் பூங்காவில், பகல் முழுவதும் மனிதர்கள் நடமாட்டம் அதன் கூண்டு அருகில் இருப்பதால், இரவுப் பறவையான ஆந்தை பகலில் தூங்க சற்று சிரமப்படுவதை காணலாம்.

சென்னையில் உள்ள வண்டலூர் விலங்கியல் பூங்கா மற்றும் கிண்டி சிறுவர் பூங்கா இரண்டிலும் கூகை ஆந்தை, கொம்பன் ஆந்தையைப் பார்க்கமுடியும். கேமராவை கையில் எடுத்தாலே, தலையை திருப்பிகொள்ளும் பழக்கமுடையன. ஆந்தைகளுக்கும் கூச்ச சுபாவம் இருக்கும் போல. அந்த அளவுக்கு கேமரா ஒளி(Flash) அதன் கண்ணில் பட்டு ஒளிறுவதால் அவைகள் செயற்கை ஒளியை விரும்புவதில்லை.

உங்கள் வீட்டருகில் இருக்கும் புள்ளி ஆந்தையை சுலபமாக பார்க்கமுடியும். அதனால் புள்ளி ஆந்தையில் இருந்து உங்கள் இரவு பறவை பார்க்கும் பழக்கத்தை தொடங்குங்கள். தனியாக இரவு பறவை பற்றிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொண்டு வாருங்கள். எதற்கு என்று எல்லாம் யோசிக்காதீர்கள், எழுதி வாருங்கள் அந்தகுறிப்புகள் பின்பு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்திய பறவையியல் நிபுணர் மறைந்த முனைவர் சலீம் அலி அவர்கள் சிறு வயதில் இருந்து இப்படித்தான் பறவைகளைப் பார்க்கும் பழக்கம் உ.டையவராகவும் ஆராய்ச்சியில் ஈடுபட்டும் இருந்தார். அவருடைய அயராது உழைப்பால் உலகப்

பறவையியல் நிபுணர்களின் பாராட்டையும் பன்னாட்டு உயரிய விருதுகளுக்கும் உரியவரானார்.

அவருக்கு கிடைத்த விருதுகளின் ரொக்கப் பணம் அனைத்தையும் மும்பை இயற்கை வராலாற்று சங்க9 (bnhs) வளர்ச்சிக்கும் இளம் பறவையியல் நிபுணர்களை உருவாக்கவும் அளித்தது குறிப்பிடத்தக்கது.

எலிகளுக்கு எமன்

ஒரு ஜோடி எலிகள் அதன் ஆயுட்காலத்தில சுமாராக 1000 முதல் 1500 குட்டிகள் இனவிருத்தி செய்யும்.. இப்படி பெருகும் எலிகளைக் கட்டுப்படுத்த இயற்கையாக உணவுச் சங்கிலியில் படைக்கப்பட்ட விலங்கினங்களில் முக்கியமானவை ஆந்தை, பாம்பு, பூனை என்பன ஆகும்.

கட்டுப்பாடற்று பெருகும். எலிகள் தானியங்களுக்கு சேதம் விளைவிப்ப தோடல்லாமல் ஆட்கொல்லி நோய்களான ப்ளேக், லெப்டொ ஸ்பிரோஸிஸ் இவற்றையும் பரப்புகிறது. இப்பொழுது புரிகிறதா ஆந்தைகளின் சூழலியல் பங்கு.

தமிழ் இலக்கியத்தில் ஆந்தைகள்

இந்தியாவின் பழமையான பஞ்சதந்திரக் கதைகளில் சித்தரிக்கப்பட்ட பல விலங்குக் கதாபாத்திரங்களில் ஆந்தையும் முக்கியமான ஒன்று. எனினும் இந்தியப் பண்பாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில், ஆந்தையின் அலறல், பயத்துக்குரியதாகவும், சகுன பலன்கள் சொல்வதற்குமே இன்றும் கருதப்பட்டு வருகிறது.

ஆந்தைகள் பற்றி ரிக்வேத காலம் முதல் இன்றுவரை பல நம்பிக்கைகள் இருந்து வருகின்றன. மேலை நாடுகளில் ஆந்தைகளுக்கு நல்ல பெயர். கீழை நாடுகளிலோ கெட்ட பெயர். ஏன் இப்படி? கிரேக்க நாட்டின் தேவதை அதீனாவுக்கு ஆந்தை வாகனம். இதேபோல இந்துக்களின் தெய்வங்களான சாமுண்டிக்கும், லெட்சுமிக்கும் ஆந்தை வாகனம். இப்படி தெய்வ வாகனமாக இருந்தபோதிலும் ஆந்தைகள் அலறலைக் கண்டு அஞ்சுவது ஏன்?

“எம்மூர் வாயில் உண்டுறைத் தடை இய
கடவுள் முதுமரத்து உடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கண் கூருகிர்
வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை
மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலி வான்சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கைஎங் காதலர் வரல்நசைஇத்
துஞ்சாது அலமரும் பொழுதில்

அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றாதீமே”–(நற்றிணை 83)

பொருள்: வலிமைமிகு கூகையே! ஊர்வாசலில் நீர்த்துறையில் நிற்கும், கடவுள் இருப்பதாகக் கருதப்படும் மரத்தில் இருப்பாய். வளைந்த வாய், தெளிந்த கண்கள், கூரிய நகங்கள் உடைய நீ, உன் வாயால் பிறரை வருத்துகிறாய்.. உனக்கு ஆட்டு மாமிசத்தோடு நெய் கலந்த சோறு தருவோம். வெள்ளெலியின் சூட்டிறைச்சியும் தருவோம். என் காதலர் வரும் இரவு நேரத்தில் பயமுறுத்தும் சப்தத்தைப் போடாமல் இரு என தலைவி சொல்வது போல அமைந்தது இந்த பாடல்.

காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை கோக்குக்கூக் காக்கைக்குக் கொக்கொக்க கைக்கைக்குக் காக்கைக்குக் ...

இது காளமேகப் புலவர் எழுதிய பாடல். 'க' வரிசை எழுத்துகளை மட்டுமே வைத்து, எழுதப்பட்ட பாடல் இது. மொத்தமாகப் படித்தால் புரிவது கடினம். இதையே பிரித்துப் படித்தால், அற்புதமான கருத்து கிடைக்கும். காக்க...

காக்கைக்கா காகூகை காக்கைக்கு ஆகா கூகை கூகை என்பது ஆந்தை. அதாவது, காக்கையால், ஆந்தையை இரவில் வெல்ல முடியாது. என்ற கருத்தில் அமைந்தது காளமேக புலவரின் தனிப்பாட்டு

பக்தி இலக்கியத்தில் ஆந்தைகள் :

முத்தைத்தரு பத்தித் திருநகை என்று பாடலில்

குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை
கொட்புற்றெழ நட்பற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல பெருமாளே !!

அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்

சித்த நீநினை யென்னொடு சூளறு வைகலும்
மத்த யானையின் ஈருரி போர்த்த மணாளன்ஊர்

பத்தர் தாம்பலர் பாடிநின் றாடும் பழம்பதி
பொத்தில் ஆந்தைகள் பாட்ட றாப்புன வாயிலே.

ஏழாம் திருமுறை : சுந்தரர் தேவாரம்.(7:50:1)

காடேல் மிக வாலிது, காரிகை அஞ்சக்
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற
வேடித் தொண்டர் சாலவும் தீயர் சழக்கர்
கோடிக்கு ழகா! இடங்
கோயில் கொண்டாயே!'

ஏழாம் திருமுறை : சுந்தரர் தேவாரம்.(7:78:4]

மாந்தர் தம் பால் நறுநெய் மகிழ்ந்து ஆடி,
வளர்சடை மேல் புனல் வைத்து,
மோந்தை, முழா, குழல், தாளம், ஓர் வீணை,
முதிர ஓர் வாய் மூரி பாடி,
ஆந்தைவிழிச் சிறு தத்தர்;
பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
சாந்து அணி மார்பரோ, தையலை வாடச்ச
துர் செய்வதோ இவர் சார்வே?

முதல் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம்(1:44:5)

காரைகள் கூகைமுல்லை களவாகை
யீகை படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மிவிம்மு சுடுகா டமர்ந்த
சிவன்மேய சோலை நகர்தான்
தேரைக ளாரைசாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல்வாரி வயன்மேதி
வைகும் நனிபள்ளி போலும் நமர்காள்.

இரண்டாம் திருமுறை திருஞானசம்பந்தர் தேவாரம்(2:84:1)

வாகை விரிந்துவெள் நெற்றொ லிப்ப
மயங்கிருள் கூர்நடு நாளை ஆங்கே
கூகையொ டாண்டலை பாட ஆந்தை
கோடதன் மேற்குதித் தோட வீசி
ஈகை படர்தொடர் கள்ளி நீழல் என்று செல்கிறது பாடல்

பதினோராம் திருமுறை திருவாலங்காட்டு திருப்பதிகம்.
(11:2:1)

வாளைக் கிளர வளைவாள்
எயிற்று வண்ணச் சிறுகூகை
மூளைத் தலையும் பிணமும்
விழுங்கி முரலும் முதுகாட்டில்
தாளிப் பனையின் இலைபோல்
மயிர்க்கட் டழல்வாய் அழல்கட்பேய்
கூளிக்கணங்கள் குழலோ
டியம்பக் குழகன் ஆடுமே. –

பதினோராம் திருமுறை மூத்த திருப்பதிகம்(11:2:2)

மேலை நாடுகளில் ஆந்தை

ஆந்தையை ஞானத்தின் சின்னமாக மேலை நாடுகளில் கருதுகிறார்கள். கிரேக்க நாட்டுத் தபால் தலைகளிலும், பழைய நாணயங்களிலும் ஆந்தையைக் காணலாம். லண்டன், அமெரிக்கா போன்ற இடங்களில் உள்ள கல்வி நிறுவனங்கள் ஆந்தையை தங்கள் சின்னங்களில் பொறித்துள்ளன என்பது வியப்புக்குரிய செய்தியாக உள்ளது. மற்ற நாடுகளில் ஆந்தை பற்றி இந்த நூலில் தனியாக தரப்பட்டுள்ளது.

ஜெங்கிஸ்கானை காப்பாற்றிய ஆந்தை

மங்கோலிய தார்தார் இனத்தைச் சேர்ந்த ஜெங்கிஸ்கான், தன் போர்ப்படையில் ஆந்தையை சின்னமாக பொறிக்க செய்துள்ளதாக செய்திகள் உள்ளது.

இந்த சம்பவம் கொஞ்சம் வித்தியாசமாகவும் சுவையாகவும் இருக்கும். ஜெங்கிஸ்கான் தாக்குதல் நடத்தி உலகின் பல பகுதிகளைப் பிடித்தான்.

ஒரு சமயம், பல போர்களைப் புரிந்து முன்னேறி வந்த ஜெங்கிஸ்கானின் குதிரையை எதிரிகள் தாக்கிக் கொன்றனர். அவன் உயிருக்குத் தப்பி ஓடினான். ஒரு பெரிய மரத்துக்கு அடியில் போய் ஒளிந்து கொண்டான்.

எதிரிகள் துருவித் துருவி தேடிக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு பெரிய ஆந்தை அந்த மரத்தின் மேல் உட்கார்ந்தது. ஆந்தை அமைதியாக உட்கார்ந்து இருப்பதால் அந்தப் புதர்ப் பகுதியில் மனித நடமாட்டம் இருக்க வாய்ப்பில்லை என்று கருதி எதிரிகள் எதிர்த் திசையில் தேடச் சென்றனர்.

இவ்வாறு ஆந்தையே வந்து தன்னைக் காப்பாற்றியதால் அவன் ஆந்தைச் சின்னத்தைத் தன் படைகளில் பொறிக்கச் செய்தான். என்ற வரலாற்று செய்தி ஆந்தையின் நேர்மறையான சிந்தனையை நமக்கு சொல்கிறது அல்லவா.

சோதிட சாஸ்திரத்தில் ஆந்தை

பஞ்சாங்கத்தில் ஐந்து பறவைகளின் படங்களைப் போட்டு அதற்கான பலன்களை எழுதி இருப்பர். அவைகளில் ஆந்தையும் ஒன்று. இது தவிர அவை பறக்கும் திசை, எழுப்பும் ஒலி, எத்தனை முறை ஒலி எழுப்பின என்பனவற்றின் அடிப்படையிலும் ஆரூடம் கூறுவர். மயில் வல்லூறு, சேவல்,காகம் ஆகிய நான்குடன் ஆந்தையையும் சேர்த்துக்கொண்டது பஞ்ச பட்சி சோதிடம் என்ற சோதிட முறையில் ஆந்தையும் இடம் பெற்றுள்ளது

அம்பலவாணப் புலவர் எழுதிய அறப்பளீசுர சதகம் நூறு பாடல்களைக் கொண்ட அருமையான நூல். அதில் சகுனங்களைப் பற்றிய செய்யுள்களில், ஆந்தை பற்றிய குறிப்புகள் உள்ளன.

சொல்லரிய கருடன் வானரம் அரவம்
மூஞ்சூறு குகரம் கீரி கலைமான்
துய்யபாரத்வாசம் அட்டை எலி புன் கூகை
சொற்பெருக மருவும் ஆந்தை
வெல்லரிய கரடி காட்டான்பூனை புலி மேல்
விளங்கும் இரு நா உடும்பு
மிகவுரை செய் இவையெலாம் வலம்
இருந்திடமாகில் வெற்றியுண்டதிக நலம் ஆம்;

ஆந்தையும் இசையும்

“மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்து
அலந்தலை ஞெமையத்து இருந்த குடிஞை
பொன்செய் கொல்லனின் இனிய தெளிர்ப்ப”–

(நற்றிணை 394, ஔவையார்)

பொருள்:–

மரங்கள் உள்ள அகன்ற காட்டில் வாடிய ஞெமை மரத்தில் பேராந்தை இருந்தது. அது பொற்கொல்லன் தொழில் செய்யும்போது ஏற்படும் ஒலி போல இனிய ஒலியை எழுப்பியது.

இதையே சம்ஸ்கிருதத்தில் உள்ள லிங்க புராணமும் கூறுகிறது.

ஆந்தைகள் எழுப்பும் ஒலி, சங்கீத ஸ்வரம் போல இருப்பதாக இந்துமத நூல்கள் சில குறிப்பிடுகின்றன *(Brown Wood Owl is said to consist of four deep musical syllables, who—hoo—hoo—hoo)* மர ஆந்தையின் குரல் 4 ஸ்வரங்களை உடையது. லிங்க புராணத்தில் நாரத முனிவரை இமய மலையில் மானசரோவர் ஏரிக்கரையில் வசிக்கும் ஆந்தையிடம் சங்கீதம் கற்கச் சொன்னதாக எழுதி இருக்கிறது. ஆகவே ஆந்தையில் ஒருவகை எழுப்பும் இசை ஒலியை இந்துக்கள் போற்றினர் என்று இந்தக் குறிப்புகளில் இருந்து அறிய முடிகிறது.

தமிழ் இலக்கியத்தில் ஆந்தைகளுக்கு 15 க்கும் மேல் பெயர்கள் உள்ளன..

- ஆண்டலை,
- ஆந்தை,
- இருடி,
- உலூக,
- ஊமன்,
- கின்னரம்,
- கின்னரி,
- குரால்,
- குடிஞை,

- கௌசிக,
- கூகை,கூன்,
- கோட்டான்,
- பிங்கலை,
- கேகயம்,
- நத்து
- கோசிகம்

ஆந்தையின் வடமொழிப் பெயரான உலூக என்பதில் இருந்தே ஆங்கிலச் சொல்லான ''அவுல்'' வந்தது என மொழிஇயலாலர்கள் சொல்லுவார்கள்.

ரிஷிகளின் பெயர்கள்

உலூக, கௌசிக, இருடி என்பதெல்லாம் ரிஷிகளின் பெயர்கள். இந்தப் பெயரில் பழங்காலத்தில் ரிஷிகள் இருந்தனர். தமிழில் பிசிர் ஆந்தையார், ஓதல் ஆந்தையார், கூகைக் கோழியார் என்பன ஆந்தையின் பெயர்கள் உடையன. பெருங் கௌசிகன் என்ற புலவரும் சங்க இலக்கிய காலத்தில் இருந்தனர்.

ஆந்தைகளின் வாழ்விடம்

நாம் எங்கு எல்லாம் உபயோகப்படுத்தாத இடமோ அங்கு ஆந்தைகள் இருக்கும். நமக்கு எத்தனை சவுகரியம் பார்தீர்களா என்று சொல்வது போல, உதாரணமாக பாழடைந்த கட்டிடங்கள், கோவில் கோபுரங்களின் மேல் உள்ள மாடப்பகுதிகள், கிணறுகள், குகைகள், பாறை இடுக்குகள், இடுகாட்டில் உள்ள அடர்ந்த உயரமான மரங்கள், நீண்ட நாள் உபயோகமில்லாத வீடு, காட்டில் உயராமான மரங்கள் புல்வெளிகள் மற்றும் மரப் பொந்துகள்.

பொதுவாக மனிதன் வாழ்விடத்தை தவிர்த்து பூங்காக்கள், சரணாலயங்கள், மிருக்காட்சி சாலைகளில் அடர்ந்த மரங்கள் உள்ள பகுதிகள். ஆந்தையின் வாழ்விடமாகும். எங்கே மனிதர் வாசம் இல்லையோ அங்கே எனக்கு ஓர் இடம் வேண்டும் என்று ஆந்தைகள் தனியாக சுதந்திரமாக வாழ்கின்றன.

இரை

ஆந்தைகள் இரவு நேரப்பறவை என்பதாலும் பகலில் மிகவும் சுறு சுறுப்பாக இல்லாததால், மற்ற பறவைகளைப் போல் அதிக அளவு நம்மால் கவனிக்கப்பட வில்லை. ஆனால் உயிர் கோளச் சூழலில் அவைகள் ஆற்றும் பணி மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஒரு ஆந்தையானது தினமும் குறைவாக மூன்று எலிகளை உட்கொள்வதாக கணக்கிட்டால் ஒரு வருடத்தில் சுமாராக ஆயிரம் எலிகளை உட்கொண்டு, தாணிய உற்பத்திக்கு நேரடியாக உதவுகிறது. அணில் மற்றும் சிறு விலங்குகளை கட்டுபத்தவும் இவை உதவுகின்றன.

இதனால் நேரடியாக விவசாயப் பயிர்களைப் பெரும் பொருள் சேதத்தில் இருந்து காப்பாற்றுகிறது. இதன் மூலம் விவசாயிகளின் நண்பர்கள் என்ற பெயரை ஆந்தைகள் பெற்றுள்ளது குறிப்பிடத் தக்கது. சிறிய ஆந்தைகள் பெரிய பூச்சிகளைக் கட்டுப்படுத்த உதவுவதோடு எப்போதாவது பாம்புகள், முயல்கள், அணில், தவளைகள் மற்றும் பல்லிகள் போன்றவற்றையும் பிடித்து உண்ணும் பழக்கம் உடையவை.

பிடித்தமான இரை

எதையும் கொறிக்கும் எலிகள், (அனைத்து வகையான எலிகளும் அடங்கும்) அதற்கு அடுத்தப்படியாக தவளை, குட்டிபாம்புகள் மற்றும் பூச்சிகளாகும். எலிகளும் ஆந்தையைப்



போல் அண்டார்ட்டிகா தவிர உலகின் எல்லா இடங்களிலும் வாழ்கின்றன. சில இனங்கள் தரையிலும், சில பூமிக்கடியில் வளைகளிலும் மற்றும் சில மரங்களிலும் வாழ்கின்றன. சில எலிகள் குளிர்காலம் முழுவதும் தூங்காமல் வாழ்கின்றன. பூமிக்குள் உணவைச் சேமித்து வைக்கும் எலிகளில் முதன்மையானது பெருச்சாளி.

ஆந்தைகளும், காட்டுப் பூனைகளும் எலிகளை அழிப்பதில் சுற்றுச் சூழல்களில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. ஏனெனில் இவை இரண்டுமே எலிகள் நடமாடும் இரவு நேரங்களில் தான் அதிகமாக வெளிவருகின்றன. புள்ளிக் ஆந்தைக்கு சுண்டெலிகள் மிகவும் பிடித்தமான இரை ஆகும். சுண்டெலிகள் அளவில் சிறியதாக இருப்பதால் மிக அதிகமாக பிடித்து தின்ன ஏதுவாகிறது. ஆந்தைகள் முற்றிலும் விதைகளை சாப்பிடாததால் மற்ற பறவைகளுடன் ஒப்பிடும்போது ஆந்தைகளை விவசாயி களின் நண்பர்கள் என்பது மிகச்சரியானது.

வித்தியாசமான செரிமானம்

பெரும்பாலான பறவைகள் தங்கள் உணவை மெல்ல முடியாது, அதற்கு ஆந்தைகளும் விதிவிலக்கல்ல. ஒரு ஆந்தை அதன் இரையைப் பிடித்தால், அதை முழுவதுமாக விழுங்கி

விடும். ஆந்தைகளுக்கு உணவு செரிமானம் சற்று வித்தியாச மானது. எலும்புகள், ரோமங்கள், இறகுகளை ஜீரணிக்க முடியாத பலவீனமான வயிற்று அமிலம் ஆந்தைக்கு உள்ளது. ஆகவே ஆந்தைகள் செரிமானம் ஆகாதவற்றை நீள உருண்டை வடிவில் நிறைந்த உமிழாக வாய்வழியாக கக்கிவிடும் (Pellets).

இருப்பினும், மற்ற பறவைகளைப் போலல்லாமல், ஆந்தை களுக்கு ஒரு செரிமானப் பை இல்லை, இது இரை பின்னர் ஜீரணிக்க ஒரு தொட்டியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆகையால் ஒரு ஆந்தையின் இரை நேராக ஜிஸார்டுக்கு செல்கிறது, இது விலங்குகளின் பொருளை உடைக்க செரிமான திரவத்தைப் பயன்படுத்தும் ஒரு உறுப்பு ஆகும்.

செயற்கை கூண்டுகள்

இந்தியாவில் கூகை ஆந்தை (Barn owl) அதிக எண்ணிக்கையில் உள்ளன. இவற்றை செயற்கை கூண்டுகள் மூலம் விவசாய நிலங்களுக்கு ஈர்க்கிறார்கள். இதனால் பயிர்நிலங்களில் உள்ள எலிகளை கட்டுக்குள் வைக்கமுடியும் என்று நம்பிக்கை. ஆந்தைகள் தனக்கு தேவையான திரவத்தின் பெரும்பகுதியை அவை உண்ணும் இரையிலிருந்து பெறுகின்றன.

மற்ற பறவைகளைப் போல் குளங்களுக்கு அடிக்கடி நீர் அருந்த வருவதில்லை. தனது இரையான எலி விவசாய நிலங்களில் கிடைப்பதால் கூகை ஆந்தைகளை அதிக அளவில் நாம் பார்க்க முடியும். பொதுவாக ஆந்தைகள் கூடு கட்டும் பழக்கம் இல்லாதால் செயற்கை கூடுகள் மூலம் ஆந்தைகளை ஈர்க்கமுடியும்.

அமர்ந்து இரை தேடுமிடம்

பொதுவாக நெல் வயல்களில் மரங்கள் அதிகம் இருக்காது. ஆகையால் ஆந்தைகள் அமர்ந்து சுற்றிலும் பார்பதற்கு ஏதுவாக கவை போல வி அல்லது டி வடிவிலான மர கட்டைகளை வயல் வரப்புகளில் நட்டுவைப்பதன் மூலம் ஆந்தைகளை ஈர்க்க முடியும். இரவு நேரப்பறவை என்பதால் மரகட்டைகள் மீது அமர்ந்து இரை தேட பயணுள்ளதாக இருக்கும். இதன் மூலம் வயல்களில் எலிகளின் எண்ணிக்கையும் கட்டுக்குள் இருக்கும். பயிர் சேதமும் குறையும். இதற்கு ஆங்கிலத்தில் *Perching pole* என்று சொல்வார்கள்.

ஆயுட்காலம்

ஆந்தைகளுக்கு தேவையான இரை, இளைப்பாறுமிடம், கூடுகட்டும் இடம் இவை மூன்றும் இருந்தால் அதன் ஆயுட்காலம் அதிகரிக்கும். பொதுவாக 6 முதல் 10 ஆண்டுகள் வரை வாழ்வதாக குறிப்புகள் உள்ளன. சிறு வடிவிலான புள்ளி ஆந்தை, காட்டு ஆந்தை போன்றவைகளின் ஆயுட்காலம் சற்று குறைவுதான். வனவிலங்கு பூங்காவில் கூகை ஆந்தை 21 ஆண்டுகள் வாழந்ததாக அறிவியல் ஆய்வுக்கட்டுரைகள் மூலம் தெரிய வருகிறது.

ஆந்தைகளைப் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள்

வட இந்தியாவில்

- லட்சுமிமகாவிஷ்ணுவிற்கு வாகனமாக கருடன் உள்ளது. ஆனால், லட்சுமியின் வாகனம் ஆந்தை என அவர்கள் வணங்குகிறார்கள். அவர்களுக்கு ஆந்தை புனிதமானது.
- ஒருவரது வீட்டில் இரவில் ஒரு ஆந்தை வந்து அலறினால் அந்த வீட்டில் விரைவில் பணவரவு நிச்சயம் என நம்புகிறார்கள்.
- ஆந்தையின் பெயரில் ஊர் ஆந்தைகுடி திருவாரூர்க்கு அருகிலும், கூகையூர் கள்ளக்குறிச்சி வட்டத்திலும் உள்ளன

ஆந்தைகள் எப்படி பிடிக்கப்படுகின்றன

உலக வனவிலங்கு நிதியகம் மற்றும் டிராபிக் என்ற அமைப்பின் ஆய்வுகளின் படி “இந்தியாவில் 32 ஆந்தை இனங்கள் காணப்படுகின்றன, அவற்றில் பெரும்பாலானவை, சர்வதேச அளவில் அழிந்து வரும் உயிரினங்களின் சிவப்பு பட்டியலில் உள்ளது என்பது அதிர்ச்சி அளிக்கிறது. ஆந்தை களைப் பிடித்தல் மற்றும் அவைகளின் வர்த்தகம் இன்றும் நடைபொறுகிறது.

தீபாவளி தருனத்தில் ஆந்தைகள் அதிக எண்ணிக்கையில் பிடிக்கபடுகிறது. ."ஆந்தையின் ஒவ்வொரு பகுதியும் "சூனியம் செய்யவதில் முக்கியத்துவம் உண்டு என்று நம்பி பிடித்து கொல்கிறார்கள் என்று பறவையியல் நிபுணர் அப்ரார் அகமது தமது ஆய்வில் குறிப்பிட்டுள்ளார்.

வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் குற்றங்களை கட்டுப்படுத்தும் துறையில் பணியாற்றிய எனது நண்பர் திரு மாரன்கோ அவர்களின் கூற்றுப்படி ஆந்தை வணிகம் இன்றும் சிறிதளவு நடைமுறையில் உள்ளது என்று கூறினார்.

ஆந்தைகளைப் பிடிக்க மூங்கில் குச்சியில் பசை தடவப்பட்டு நீண்ட மரக் கிளையின் முனையில் பொருத்துகின்றனர். ஆந்தை மரக் கிளையில் இருந்து மூங்கில் குச்சிமேல் அமர மெல்ல மெல்ல நகர்த்துகிறது, பசை தடவப்பட்ட குச்சி இறக்கைகளில் படுவதால் கீழ்விழுகிறது. ஆந்தை அதில் சிக்கி பறக்கும் சக்தியை இழுக்கிறது. வேட்டைக்காரர்கள் ஆந்தையை பிடித்து விடுகின்றனர்.

தீபாவளியின் போது வீட்டின் கதவுக்கு வெளியே புதைக்கப்பட்ட உயிருள்ள ஆந்தை.செழிப்பைக் கொண்டுவரும் என்ற. சடங்கும், நம்பிக்கையும் உள்ளதால் பிலிபித், மீரட், மொராதாபாத் மற்றும் ஆக்ரா முதல் டேராட் வரையிலான பகுதிகளில் ஆந்தை கொல்வது நிறைய நடைபெறுகிறது. மேலும் வனப் பாதுகாவலர்கள், உத்தரகாண்டின் குமாவோன் பகுதி காவல் துறையும், வனத்துறைக்கு உதவியாக இருந்து தீபாவளியின் போது இந்நிகழ்வை பெரும் அளவில் தடுத்து வருகின்றனர்.

பாதுகாப்பதன் அவசியம்

பொதுவாக ஆந்தையை தெடர்ந்து முயற்சி செய்தால் மட்டுமே பாக்கமுடியும். அந்த அளவுக்கு அதன் எண்ணிக்கையும் குறைந்துவிட்டது. முக்கிய காரணம் அவற்றின் வாழ்விடத்தை பெரும்பகுதி நாம் அழித்துவிட்டோம் மற்றும் வயல்பரப்பளவு குறைந்ததும் இரை தேட வேறு இடம் சென்றுவிடுகின்றன. மற்றும் கள்ள சந்தையில் விற்பனை நடைபெறுவதும் ஒரு

காரணம் என்றும் தற்போதையச் செய்திகள் மூலம் தெரிய வருகிறது.

மத்திய, மாநில அரசாங்கம் வனவிலங்குச் சட்டங்களை (1972) கடுமையான முறையில் பின்பற்றினாலும், பொது மக்களுக்கு தகுந்த விழிப்புணர்வு இல்லாததால் வனவிலங்கு வணிகம் ஆங்காங்கே மறைமுகமாக நடைபொறுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டம் 51A ன்படி பொதுமக்களுக்கு பல்லுயிர்களைக் காப்பது இன்றியமையாத கடமையாகும்.

நாம் மட்டும் வாழ்வதற்கான இடம் இந்த பூமி இல்லை என்ற நினைப்பில் இருந்து மனிதர்கள் சிறிதளவாவது மாற வேண்டும்.

கூகை ஆந்தை

அறிவியல் பெயர் : Barn owl (Tyto alba) Tyto derived from Greek word meaning night. Alba means white or dull white colour. இந்திய துணைக்கண்டம் முழுவதும் காணப்படக் கூடிய ஆந்தையாகும்.

உணவு : பெரும்பாலும் எலிகள், சுண்டெலி, சிறுபாம்பு தவளை, பூச்சிகள்.

சிறப்பு அம்சம் : இதயவடிவ முகம், ஒருநாளைக்கு 3 எலி களை உணவாக உட்கொள்ளும்.

இனப்பெருக்கம் : வருடம் முழுவதும்.

வாழ்நாள் : 21 ஆண்டுகள்

இந்தியக் கழுகு ஆந்தை

அறிவியல் பெயர் : Indian eagle owl- (Bubo benghalensis(

உணவு : மீன், தவளை, நண்டு, பாம்பு

சிறப்பு அம்சம் : இந்தியாவில் காணப்படும் பெரிய கொம்பு ஆந்தை. உயரம் 60 சென்டிமீட்டர், சராசரி எடை 3 2 கிலோ

இனப்பெருக்கம் : வருடம் இருமுறை

வாழ்விடம் : மலைப்பகுதி, ஆற்றங்கரை ஓரம்.

வாழ்நாள் : 20 ஆண்டுகள்

புள்ளி சிறு ஆந்தை

அறிவியல் பெயர் : Spotted owlet- (Athene brama) , தென்கிழக்கு ஆசியாவில் காணப்படக்கூடிய சிறுவகையைச் சார்ந்த ஆந்தையினம்

உணவு : சுண்டெலி, தவளை, பல்லி, பூச்சிகள்.

சிறப்பு அம்சம் : வட்ட முகம், உடல் பழுப்பு நிறம், அதன் மேல் சாம்பல் நிற புள்ளிகள். 21 செ.மீ உயரம்.

இனப்பெருக்கம் : வருடத்தில் இரு முறை. 3 முதல் 5 முட்டைகள். மரப்பொந்துகளில் கூடு அமைத்து வாழும்.

வேட்டைக்கார ஆந்தை

அறிவியல் பெயர் : Brown hawk owl (Ninox scutulata)

உணவு : பெரிய பூச்சிகள், தவளை, ஓணான், சுண்டெலி.

சிறப்பு அம்சம் : பழுப்பு நிறம், 32 செ.மீ உயரம். பார்பதற்கு பருந்து போல் இருக்கும். நகர்ப்புறங்களில் காடுகள் ஒட்டியுள்ள பகுதிகளில் அதிகம் காணலாம்.

இனப்பெருக்கம் : வருடம் இருமுறை, 2 முட்டைகள். பெண் ஆந்தை 25 நாட்கள் அடைகாக்கும். இந்த சமயத்தில் ஆண் ஆந்தை உணவுதரும்.

புள்ளி ஆந்தை

ஆந்தையை ஈர்கவேண்டும் என்றால்

வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்..

தோட்டத்தை குப்பையாக வைத்துக்கொள்..

எலிகளை ஆந்தை சாப்பிடுவதால் தான்

விவசாயிகள் சேகரித்துள்ள உணவு பாதுகாக்கப்படுகிறது...

நம்மாழ்வார்...

ஆந்தை பற்றிய ஊடகச்செய்திகள்..

புதிய ஆந்தை வகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது...

ஆப்பிக்காவில் உள்ள பிரின்சிபி தீவில் மார்டிம் மெலோ (CIBIO) மற்றும் போர்டோ பல்கலைக் கழகத்தின் இயற்கை வரலாறு மற்றும் அறிவியல் அருங்காட்சியகம்), Barbara Freitas *(CIBIO மற்றும் ஸ்பானிஷ் தேசிய இயற்கை அறிவியல் அருங் காட்சியகம்) மற்றும்* Angelica Crottini *தலைமை யிலான சர்வதேச குழுவால் இவந்த புதிய வகை ஆந்தை இனம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.*

The bird is now officially known as the Principe Scops-Owl (Otus bikegila).

https://www.nationalgeographic.com/animals/article/a-new-species-of-owl-has-been-discovered

ஆஸ்திரேலிய ஆந்தை மீட்பு

வைத்தீஸ்வரன் கோவிலில் ஆஸ்திரேலிய ஆந்தை மீட்கப் பட்டு, வனத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

https://www.dailythanthi.com/News/Districts/2022/01/04234820/Australian-Owl-Rescue.vpf

திருப்பத்தூர்: அடிபட்டு கிடந்த ஆந்தை வனத்துறையிடம் ஒப்படைத்த பசுமை தாய்நாடு அறக்கட்டளை நிறுவனர்

https://public.app/video/sp_innfp8t1y0g4x

சீர்காழியில் பிடிபட்ட அரிய வகை ஆந்தை வனத்துறை யினரிடம் ஒப்படைப்பு

https://www.instanews.city/tamil-nadu/mayiladuthurai/wol-caught-handing-over-forest

வெள்ளை ஆந்தை மீட்டெடுத்து வனத்துறை அதிகாரியிடம் ஒப்படைப்பு

https://tamil.getlokalapp.com/tamilnadu-news/cuddalore/kurinjipadi/the-white-owl-was-recovered-and-handed-over-to-the-forest-officer-

பல ஆண்டுகளுக்குப் பின் குஞ்சு பொறித்த மோர்போர்க் ஆந்தை

https://www.polimernews.com/dnews/

அரிய வகை வெள்ளை ஆந்தையை பார்க்க குவிந்த மக்கள்

https://winnews.in/newsdetails.php? newsid= 2627 & news= People_flock_to_see_the_rare_white_owl

தாய் ஆந்தை

shorturl.at/oAIS

சர்வதேச ஆந்தை விழிப்புணர்வு தினத்தில் கொட்டகை ஆந்தைகளால் ஈர்க்கப்படுங்கள்

shorturl.at/bds15

வீட்டில் தஞ்சமடைந்திருந்த அரியவகை ஆந்தை 5 குஞ்சுகளுடன் மீட்பு

குறும்படம் https://www.youtube.com/watch?v=zdꞌlTDy-WCk

ஆந்தையின் குரலை கேட்க..

https://open.spotify.com/track/2WVtGdK7VrX3mNH3FbvTjw?si=rru-v_ANQFye3cnWdaJVFA

உலக ஆந்தை புராணம்

ஆப்கானிஸ்தான்: *ஆந்தை நெருப்பை உண்டாக்க மனிதனுக்கு எரிகல்லையும் இரும்பையும் கொடுத்தது அதற்கு ஈடாக மனிதன் ஆந்தைக்கு தன் இறகுகளைக் கொடுத்தான்.*

ஆப்பிரிக்கா (தெற்கு) சூலஸ் ஆந்தையை மந்திரவாதிகளின் பறவை என்று அறிவார்கள்.

ஆஸ்திரேலியா: *வெளவால்கள் ஆண்களின் ஆன்மாவையும், ஆந்தைகள் பெண்களின் ஆன்மாவையும் பிரதிநிதித்துவப் படுத்துவதாக ஆதிவாசிகள் நம்புகிறார்கள். ஆந்தைகள் புனிதமானவை, ஏனென்றால் உங்கள் சகோதரி ஒரு ஆந்தை மற்றும் ஆந்தை உங்கள் சகோதரி.*

பிரான்ஸ்: *ஒரு கர்ப்பிணிப் பெண் ஆந்தை சத்தம் கேட்டால் அவள் குழந்தை பெண்ணாக இருப்பதற்கான சகுனம்.*

மடகாஸ்கர்: *இறந்தவர்களின் கல்லறைகளில் ஆந்தைகள் மந்திரவாதிகளுடன் சேர்ந்து நடனமாடுகின்றன.*

மங்கோலியா: *புதைக்கப்பட்ட மக்கள் தீமையைத் தடுக்க ஆந்தையின் தோலைத் தொங்கவிடுகிறார்கள்.*

பர்மா: *பறவைகளுக்குள் ஏற்பட்ட சண்டையின் போது, ஆந்தை பாய்ந்து, அதன் முகம் தட்டையானது.*

நியூசிலாந்து: *மவோரிகளுக்கு இது ஒரு துரதிர்ஷ்டமான பறவை.*

சைபீரியா: *ஆந்தை ஒரு உதவும் ஆவி.*

இலங்கை: *ஆந்தை வெளவால் திருமணம் செய்து கொண்டது.*

ஸ்வீடன்: ஆந்தை சூனியக்காரிகளுடன் தொடர்புடையது.

ஹவாய்: பழைய போர் பாடல்களில் ஆந்தைகள் இடம்பெறும்.

நியூ மெக்ஸிகோ: ஆந்தைகளின் கூச்சல் மந்திரவாதிகள் வருவதை எச்சரிக்கிறது.

ஸ்காட்லாந்து: பகலில் ஆந்தையைப் பார்ப்பது துரதிர்ஷ்டம்.

இலினாய்ஸ்: ஒரு ஆந்தையைக் கொன்றால், பழிவாங்கல் உங்கள் குடும்பத்திற்கு வரும்.

பின்னுரை

ஆந்தையின் குரலில் அர்த்தங்கள் உண்டு..
அவை ஆந்தைக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும்..
அது சரி.. ஆந்தை என்ன அத்தனை ஆபத்தா...
காக்கை குருவி
எங்கள் கூட்டம்
என சொன்ன பாரதி
ஆந்தையை சொல்ல வில்லை
பஞ்ச தந்திரத்தில்
இ(ப)டம் பிடித்த ஆந்தை
சகுண சாத்திரததில்
சரம் கண்ட ஆந்தை
சோதிட நூலில்
தடம் பதித்த ஆந்தை
மக்கள் மனதில்
இடம் பிடிக்க வில்லை
காரணம்
குயில் போல
குரல் இனிமை இல்லை
இதில் இருந்து
இங்கே
தெரிந்து கொள்ள வேண்டியது இது தான்...

பாரதியும் இதை தான்
சொல்கிறான்
"வாக்கினில் இனிமை வேண்டும்"
வள்ளுவமும்
இன்சொல் பேச வேண்டும்..
என்கிறது..
"யாவர்க்குமாம் இன்னுரை தானே"
என திருமூலரும் சொல்கிறார்.

மனிதர்கள்
மற்ற உயிர்களிடம் இருந்து
கற்க வேண்டிய பாடம் இது..
இன்சொல் இனிது...
ஆந்தை வேளாண்மைக்கு ஆற்றும்
பணி மிகப் பெரிது...

காகம்- ஆந்தை

- ★ காகம் பறந்தால் ஓசை வரும் ஆந்தை பறந்தால் ஓசை வராது
- ★ ஆந்தை இருளில் திரிவது மனிதர்களுக்கு தொல்லை தர கூடாது என்ற உயர்ந்த எண்ணம் கொண்டது.
- ★ காகம் இரவில் தூங்கி அதிகாலை எழுவது.
- ★ மக்களை அதிகாலையில் எழுப்புவதால் காகம் பறந்தால் சத்தம் வரும்

ஆக பறவைகள் மனித நலனை பேணுகிறதே மனிதன் பறவை நலம் பேண வேண்டாமா?

Reference

- ✦ Ramanujam, E (2018) In Achilles' Footsteps: Adventures with The Indian Eagle-Owl. Bombay Natural History Society Pp 165.
- ✦ Tamil and Vedas blog is written by Santhanam Swaminathan
- ✦ https://www.birdnote.org/show/harry-potters-owls
- ✦ https://birdwatchinghq.com/facts-about-owls/
- ✦ https://www.owlpages.com/
- ✦ https://www.owlworlds.com/
- ✦ https://www.owlpages.com/owls/articles.php?a=63
- ✦ https://www.traffic.org/publications/reports/imperilled-custodians-of-the-night/
- ✦ http://ogaclicks.com/

ஆசிரியரைப்பற்றி..

1987ல் தொடங்கிய இரண்டு ஆண்டு கிழக்குத் தொடர்ச்சி மலை பறவைகள் ஆய்வுப் பயணம், கோவை மாவட்டத்தில் உள்ள நீலகிரி உயிர்கோள இயற்கைப் பூங்காவில் இருபது வருடங்களாக ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிய அனுபவம் பெற்ற இவருக்கு பறவைகள் பற்றிய ஆவல் இன்றும் குறையவில்லை.

சமீபமாக பத்து வருடங்கள், பிச்சாண்டிக்குளம் காடுகள் ஆலோசனை மையத்தின் மூலம் சென்னை அடையாறு கழிமுக பகுதியில் உள்ள தொல்காப்பியர் பூங்காவில் பராமரிப்பு மேலாளராக பணியாற்றிய அனுபவம் கடல்சார்ந்த பறவைகள் பற்றி அறிந்து கொள்ள துணையாக இருந்தது.

வனஉயிரியல் (Wildlife Biology) முதுகலை பட்டம் பெற்றுள்ள இவர் (M.Sc., M.Phil.,) இந்தியாவின் தேசிய பறவையான மயில் பற்றியும் அதன் வாழ்வியல் நிலை குறித்தும் ஆய்வு செய்துள்ளார். 1987ல் தொடங்கிய பறவைகள் பற்றிய ஆய்வு இன்றும் தொடர இயற்கை இவருக்கு உறுதுணை யாக இருப்பது இயற்கை இவருக்கு கொடுத்த பரிசாகவே உள்ளது.

இவரின் படைப்புகள் ‘வளம் தரும் விருட்சங்கள்’, ‘ஆலய விருட்சங்கள்’, ‘இந்திய பல்வண்ண நீல மயில்’, ‘வீட்டுக்கு போகும் குட்டி யானை’ இவரது படைப்புகள் தமிழில் வருவது இவருக்குள்ள தமிழ் ஆர்வத்தை எடுத்து காட்டுவதாகவும் தமிழோடு அறிவியலை வளர்ப்போம் என்ற இவரது சிந்தனையும் மக்கள் மத்தியில் வரவேற்பு பெற்றுள்ளது என்றால் அது மிகையில்லை.

நூலாசிரியரின் பிற நூல்கள்...